# நீதி வெண்பா

கா.ப.செய்கு தம்பிப் பாவலர்



# செய்கு தம்பிப் பாவலர்

- பெயர் : செய்கு தம்பிப் பாவலர்
- பெற்றோர் : அமீனா அம்மையார் - பக்கீர் மீரான் சாகிபு
- ஊர் : கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி
- காலம் : ஜூலை 31, 1874 – பிப்ரவரி 13, 1950
- சிறப்பு : சதாவதானி ( ஒரே சமயத்தில் நூறு வகையான செயல்கள் செய்யும் கலை சதாவதானம் )
- நூல்கள் : இன்னிசைப் பாமாலை, நீதி வெண்பா........

# நீதி வெண்பா



அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

# பாடல் பொருள்

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.